

மியாட் மருத்துவமனையில் கல்லீரல் நோயாளிகளுக்கான ஜிம் தொடக்க விழாவில் கலந்து கொண்ட மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், நிர்வாக இயக்குனர் டாக்டர் பிரிதிவி மோகன்தாஸ் மற்றும் டாக்டர்களை படத்தில் காணலாம்.

### ரூ.6 ஆயிரம் மதிப்பில் இலவச பரிசோதனை

# கல்லீரல் பரிசோதனைக்கான நவீன கருவிகளுடன் 'ஜிம்'

## 'மியாட்' மருத்துவமனை தொடங்கியது

சென்னை, ஜூன்.7–

கல்லீரல் பரிசோதனைக்கான நவீன கருவிகளுடன் 'ஜிம்' ஒன்றை மியாட் மருத்துவமனை தொடங்கி உள்ளது.

**கல்லீரல் நோய்**

ஆண், பெண் இருபாலரிடமும் அதிகமாக மது அருந்தும் பழக்கம், கொழுப்பு நிறைந்த உணவுகளை உட்கொள்ளுதல் மற்றும் உடல் உழைப்பு இல்லாத வாழ்க்கை முறை போன்றவை அதிகரித்துள்ளது. இந்த மாற்றங்களினால் கல்லீரல் பாதிக்கப்படுவதோடு, கல்லீரல் நோய் அதிகரிக்க காரணமாகிறது. இதில் பாதிக்கப்பட்டவர்களில் இளவயதினர் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

கல்லீரல் பாதிப்பிற்கு நீரிழிவு முக்கிய காரணியாக விளங்குகின்றன. இந்தியர்களில் 5 பேர்களில் ஒருவர் கல்லீரல் நோயால் பாதிக்கப்படுகிறார்கள்.

**விழிப்புணர்வு இல்லாதது**

கல்லீரல் 90 சதவீதம் சேதமடைந்த பிறகும் அமைதியாக வேலை செய்கிறது. பாதிப்பு உடனுக்குடன் கண்டறியப்படாவிட்டால் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மட்டுமே உயர்வாழ்வதற்கான ஒரே வழியாகி விடுகிறது. தரமான மாற்று அறுவை சிகிச்சை மையம் இல்லாதது, தானம் வழங்குபவர்கள் போதுமான அளவு இல்லாதது, மாற்றுச்சிகிச்சைக்கு ரூ.30 முதல் ரூ.35 லட்சம் வரை செலவு போன்ற காரணங்களால் இந்தியர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வது கேள்விக்குறியாகி விடுகிறது. பெரும்பாலானவர்கள் போதிய விழிப்புணர்வு இல்லாமல் இருக்கின்றனர்.

இதனை போக்கும் வகையில் மியாட் இண்டர்நேஷனல் மருத்துவமனை செயல்பட்டு மியாட் கல்லீரல் லிவர் 'ஜிம்'மைத் தொடங்கி உள்ளது.

**90 சதவீதம் வெற்றி**

இதில் பதிவு செய்தவர்களுக்கு ரூ.6 ஆயிரம் மதிப்பிலான இலவச கல்லீரல் பரிசோதனை, நிபுணர்களின் ஆலோசனை மற்றும் கல்லீரல் உடற்பயிற்சி திட்டங்கள் ஆகியவை வழங்கப்பட உள்ளது. கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கான தரம் உயர்த்தப்படுவதுடன், சிகிச்சைக்குப் பின் ஏற்படும் விளைவுகள் குறித்தும் விளக்கமளிக்கப்படுகிறது.

மியாட் மருத்துவமனை சர்வதேச தரத்துடன் அனைத்து நோயாளிகளுக்கும் பொருந்தும் வகையில் கல்லீரல் சிகிச்சை முறைகள் இருக்கும் என்ற உறுதியை அளிக்கிறது. அத்துடன் துல்லியமான பாதிப்பு குறித்த கணிப்பு, எதிர்கால விளைவுகள், குணமடையும் சூழல், நோயாளிகளின் நலனில் அக்கறை, நன் மதிப்பை காத்தல் மூலம் மியாட் 90 சதவீதம் வெற்றியை எட்டியுள்ளது.

இந்த தகவலை மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ் தெரிவித்துள்ளார்.